பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 14 செவ்வாய்க்கிழமை (28-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 62

# புதிதாக வாங்கிய 25 டாங்குகளை ராணுவம் பாவிக்க முடியாத நிலை!

## வடக்கு, கிழக்கு யுத்தமுனைக்கு கொண்டு வருவதில் சங்கடம்

கொழும்பு, ஜனவரி 28

ஹங்கேரி நாட்டிடமிருந்து ஸ்ரீலங்கா இராணுவம் கடந்த அக்டோபரில் கொள்வனவு செய்த இருபத்தைந்து இலகுரக கவச வாகனங்களை உபயோகிக்க முடியாத நிலை படையினருக்கு ஏற்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தக் கவச வாகனங்களை வடக்கு, கிழக்கு யுத்த முனைக்குக் கொண்டு வருவதில் சங்கடம் இருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

இயந்திரக் கோளாறுகள், தேவையான உதிரிப்பாகங்கள் இல்லாமைப் போனமை ஆகியவை காரணமாகவே இந்தக் கவச வாகனங்களை உபயோகிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

கலைக்கப்பட்ட வார்ஸோ இராணுவக் கூட்டணியில் முன்னர் அங்கம் வகித்த கிழக்கு ஐரோப்பிய நாடுகள், தமது நாட்டில் நீண்ட காலமாக பயன்படுத்திய கவச வாகனங்களே இவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கவச வாகனங்களை ஹங்கேரி நாடு மீளமைத்து

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பதுளையில் 100 புலிகள் மறைந்து இருக்கின்றனராம்!

கொழும்பு, ஜன. 28

பதுளைப் பிரதேசத்தில் குறைந்தது நூறு விடுதலைப் புலிகள் மறைந்திருக்கின்றனர் என்று பொலீஸார் நம்புகின்றனராம்.

விடுதலைப் புலிகள் மலையகத்தில் கெரில்லாப் பாணி தாக்குதல்களை நடத்த ஆரம்பித்தால் அது இராணுவ ரீதியான பிரச்சினையாக மட்டும் இராது என்றும்—

அது நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையாகவும் மாறும் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர் என்று ''சண்டே ரைம்ஸ்'' கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்படுகிறது.

பதுளை மாவட்டத்தில் 98 தேயிலை மற்றும் றப்பர் தோட்டங்கள் உள்ளன.

கடந்த பத்தாம் திகதி பதுளை — எல்ல தோட்டத்தில் இடம்பெற்ற கொலை மற்றும் கொள்ளைச் சம்பவத்தைத் தொடர்ந்து—

மலையகத்தில் கைது, ஆட்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## உள்ளூரில் தயாரிக்கப்பட்ட அதிவேக விசைப்படகுகள் கடற்படையின் பாவனையில்

கொழும்பு, ஜன. 28

ஸ்ரீலங்கா கடற்படையினர் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட புதியரக அதிவேகவிசைப்படகுகளை (Water-jet Propelled) வடக்கு, கிழக்கு கடற்பகுதியில் உபயோகிக்கத் தொடங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தற்போது கடற்படையினர் பாவிக்கும் சும்பர் டுவோரா அதிவேகப் படகுகள் செல்ல முடியாத — ஆழங்குறைந்த — கடற் பகுதியில் உள்ளூரில் தயாரித்த புதிய படகுகள் செல்லக்கூடியதாக உள்ளன என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இரட்டை டீசல் எஞ்ஜின்களைக் கொண்ட இப்படகு ஒவ்வொன்றும் ஆறு தொன் எடை கொண்டவை. 45 அடி நீளமான இதன் வேகம் 40

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அரந்தலாவையில் வெடித்தது பழைய கண்ணி வெடியாம்!

அரந்தலாவையில் பல மாதங்களுக்கு முன்னர் புதைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியே நேற்று முன்தினம் அங்கு வெடித்தது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

அப்பகுதியில் மேலும் கண்ணி வெடிகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிந்து அவற்றை அப்புறப்படுத்தும் பணியில் பொதுமக்களும் பாதுகாப்புப் படையினருடன் ஈடுபட்டிருப்பதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## மீண்டும் 650 அகதிகளுடன் அக்பர் கப்பல் திருமலைக்கு!

கொழும்பு, ஜன. 28

தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள ஈழத் தமிழ் அகதிகளில் — இரண்டாம் தொகுதியாக சுமார் 650 பேரை — ஏற்றிக் கொண்டு இந்தியக் கப்பல் 'எம். வி. அக்பர்' நேற்று சென்னைத் துறைமுகத்தில் இருந்து திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

அக்கப்பலுக்கு உதவியாக இந்திய கரையோரக் காவல் படைக் கப்பல் 'கங்கா தேவி' யும் கடற்படைக் கப்பல் குல்ஸாரும் செல்கின்றன என்றும் அறிவிக்கப்படுகிறது.

மூன்றாவது அகதிகள் குழு எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி சென்னையில் இருந்து திருமலை நோக்கிப் புறப்படும். [உ-எ]

## ம.எண்ணெய் லீற்றர் 30ரூபா! மேலும் விலை குறையும்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படும் மண்ணெண்ணெய்யை லீற்றர் 30 ரூபா வீதம் விற்பனை செய்வது என யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் வர்த்தகக்குழு முடிவு செய்திருக்கிறது.

தற்போது கையிருப்பில் உள்ள மண்ணெண்ணெய் விநியோகித்து முடிந்த பின்னர் மேலும் விலைக் குறைப்பு செய்வது பற்றி ஆராயப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

## ஈழத் தமிழ் அகதிகள் விடயம்; கனடாவில் கடும் நடவடிக்கை!

அகதி அந்தஸ்துக்கோரும் ஈழத் தமிழர் குறித்து கடுமையான நடவடிக்கைகளை கனேடிய அகதிகள் சபை எடுக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அகதிகளின் விண்ணப்பங்கள் அனைத்தும் நுணுக்கமான பரிசீலனைக்கு உள்ளாக்கப்படும் என்றும்—

அவர்கள் உண்மையாக அரசியல் தஞ்சம் கோருபவர்களா அல்லது பொருளாதார அகதிகளா என்பது அவ்விசாரணைகளின் போது கண்டறியப்படும் என்றும் கொழும்பு வந்துள்ள கனேடிய மனித உரிமைக் குழுவினர் தெரிவித்தனர்.

எனினும் கனடாவில் ஏற்கனவே தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் திட்டம் எதுவும் கனேடிய அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் தூதுக் குழுவினர் தெரிவித்தனர்.

யுத்தத்தினால் சீரழிந்துள்ள வடக்கு - கிழக்குப் பகுதியிலிருந்து வெளியேறும் பொது மக்களுக்கு அந்த நாட்டின் தென்பகுதியில் தங்குமிட வசதிகளைச் செய்து கொடுக்கமுடியும் என்று கனேடிய அரசு நம்புவதாகவும் தூதுக்குழுவினர் தெரிவித்தனர். (உ-எ)

## மனித உரிமைகள் கண்காட்சியை ஆயுதக் கும்பல் நாசமாக்கியது!

### மாத்தறையில் நள்ளிரவு வேளை அட்டகாசம்

கொழும்பு, ஜன. 28

மாத்தறை, உயன்வத்தை மைதானத்தில் நடத்தப்பட்ட மனித உரிமை தொடர்பான கண்காட்சியை நேற்று அதிகாலை 1 மணியளவில் ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று தாக்கி நாசப்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரசினால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள், அடக்குமுறைகள் ஆகியவற்றை வெளி உலகுக்கு எடுத்துக் காட்டும் வகையில் பிரஜைகள் குழுவால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தக் கண்காட்சியில்—

காணாமற் போனோரின் படங்கள், சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள் வைக்கப்பட்டிருந்தன.

நேற்று அதிகாலை ஒருமணி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



வாங்கையிக்கை கமிஷனைப் ... சிருப்பினம்...!

## மீனவர்கள் மீது தாக்கு!

யாழ். குடா கடலில் நேற்று முன்தினம் இரவு 11-30 மணியளவில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மூன்று மீனவர்களை கடற்படையினர் தாக்கிக் கடலில் வீசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீன் பிடி உபகரணங்களை படையினரிடம் இழந்த நிலையில், மயிலிட்டியைச் சேர்ந்தவர்களான மனுவல் சிறில், சிறில் சூரியன், சாமிநாதன் பிரின்ஸ் ஆகிய அந்த மீனவர்கள் கரை சேர்ந்தனர்,

இதேசமயம்— நேற்று அதிகாலை 2 மணியளவிலும் குடாக் கடலில் தொழில் செய்துகொண்டிருந்த மீனவர்களை நோக்கி மண்டைதீவுப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். [உ-3-15]

## 1,000 மெற்றிக் தொன் அரிசி ப. நோ. கூ. ச. மூலம் வரும்

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ். குடாநாட்டில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்றிணைந்து ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியைக் கொழும்பிலிருந்து கொண்டுவரவுள்ளன.

நூறு லொறி ''லோட்'' கொண்ட அரிசியைக் கொள்வனவு செய்வதற்காக ப. நோ. கூ. சங்கங்கள் இணைந்து ஒரு கோடி 60 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருக்கின்றன.

அரிசியைக் கொள்வனவு செய்வதற்காக சங்கங்களின் உயரதிகாரிகளைக் கொண்ட ஐவர் குழு ஒன்று இன்று கொழும்பு செல்கிறது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டாவின் திட்டத்தை எதிர்க்க சு.க.வில் தனி அணி!

## பேரினவாத எம். பிக்கள் கூட்டுச் சேருகிறார்கள்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அமைச்சர் எஸ். தொண்டமான் வெளியிட்டிருக்கும் யோசனையை எதிர்த்துச் செயல்படுவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் புதிய அணி ஒன்று உருவாகியிருக்கிறது.

கட்சி எம். பிக்கள் பலரும், பல முக்கிய பிரமுகர்களும் ஒன்று சேர்ந்து ''ஹெல உறுமய'' (தேசிய பாரம்பரியம்) என்ற பெயரில் இந்த அணியை உருவாக்கியிருக்கிறார்கள்.

இந்த அணி பொதுக் கூட்டங்கள் மற்றும் சுவரொட்டிப் பிரசார இயக்கம் ஆகியவற்றை நாடு முழுவதும் நடத்தத் திட்டமிட்டிருக்கிறது.

இந்த அணிக்கு திரு. ஜினதாஸ நியதபால மற்றும் சுதந்திரக்கட்சி எம். பி. திரு. எஸ். எல். குணசேகரா ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

இந்த அணியின் முதல் கூட்டம் இம்மாதம் 21 ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத்தில் நடந்தது.

இதுவரை 30 சுதந்திரக் கட்சி எம். பிக்கள் இந்த அணியில் சேர்ந்துள்ளனர் என்றும்—

அவர்களில் அதிகமானோர் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம் பெற்றுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

இந்த அணியில் சேர்ந்துள்ள எம். பிக்கள் அனைவரும் பாரம்பரிய சிங்களத் தொகுதிகளைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்த அணிக்கு முதலில் 'சிங்கள பாரம்பரியம்' என்றுதான் பெயர் வைக்கப்பட விருந்தது. அது பேரினவாதக் கொள்கையைக் குறிக்கும் என்ற காரணத்தினால் பின்னர் 'ஹெல உறுமய' என்ற பெயர் வைக்கப்பட்டது.

''ஹெல உறுமய'' அணியின் முதலாவது பிரசாரப் பொதுக் கூட்டம் சுதந்திர தினமன்று (பெப்ரவரி 4) பண்டாரகமையில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

சிங்களவர்களின் உரிமைகளைப் பேணும் ஓர் அமைப்பாக இந்த அணி சுதந்திரக் கட்சிக்குள் செயற்படும் என்று அணியினர் சார்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# தொண்டாவின் யோசனையால் சுதந்திரக் கட்சிக்குள் பிளவு

கொழும்பு, டிச. 28

தொண்டமானின் யோசனைகளை எதிர்ப்பதற்காக சுதந்திரக் கட்சி எம். பிக்கள் சிலர் சேர்ந்து அமைத்துள்ள ''ஹெல உறுமய'' [தேசிய பாரம்பரியம்] என்ற புதிய அணி குறித்து அக் கட்சியினுள் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

கண்டி மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பியான லஷ்மன் கிரியெல்ல புதிய அணியில் சேர மறுத்துவிட்டார். இந்த அணுகுமுறையால் சிறுபான்மையினரின் வாக்குகளை பெறமுடியாது போய்விடும் என்று திரு. கிரியெல்ல கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இதே வேளை -

இனக்குரோத உணர்வைத் தூண்டிவிடும் செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று 'ஹெலஉறுமய' அணியினருக்கு சுதந்திரக் கட்சித் தலைவரான திரு. அனுரா பண்டாரநாயக்கா எச்சரித்திருக்கிறார்.

தம்மைச் சந்தித்த ''ஹெல உறுமய'' அணித் தலைவர்களான திலக் கருணாரத்தினா, ஹேமகுமார நாணயக்கார ஆகியோரிடம் திரு. பண்டாரநாயக்கா இனவாத உணர்வைத் தூண்டுவதில் உள்ள ஆபத்துக்களை எடுத்துரைத்தாராம்.

விடுதலைப்புலிகள் இராணுவ அணுகு முறையைக் கடைப் பிடித்தாலும் எல்லா சமூகங்களையும் திருப்தி செய்யக் கூடிய நியாயமான தீர்வு ஒன்றை ஏற்க பெரும்பாலும் தமிழர் தயாராக இருக்கின்றனர் என்றும் திரு. அனுராபண்டாரநாயக்கா அவர்களிடம் கூறினார்.

தொண்டமான் யோசனைகளைத்தான் தாங்கள் எதிர்ப்பதாகவும் தமது அணி தமிழருக்கு எதிரானதல்ல என்றும் அணியின் தலைவர்கள் அனுராவிடம் எடுத்துக் கூறினர்.

சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெறுவதற்காக தொண்டமானின் யோசனைகளிலும் பார்க்கக் கூடுதலாக கொடுக்க வேண்டிய நிலை சுதந்திரக் கட்சிக்கு ஏற்படும் என்றும் —

அப்படிச் செய்தால் சிங்கள மக்களின் வாக்குகளை இழக்க வேண்டி வரும் என்றும் புதிய அணியினர் கூறினார்கள். (உ-எ)

## சுதந்திரக் கட்சித் தலைமைப் பதவி

# ஸ்ரீமாவோவின் திட்டத்துக்கு அனுரா ஆதரவாளர் ஆப்பு!

கொழும்பு, ஜன. 28

தான் இல்லாத சமயத்தில் கட்சியின் விவகாரங்களைக் கவனிக்க மூவர் கொண்ட குழு ஒன்றை நியமிக்க சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முயற்சி எடுத்தார் என்றும்—

—ஆனால் அந்த முயற்சியைக் கட்சியின் தேசிய அமைப்பாளர் திரு. அனுரா பண்டாரநாயக்காவின் ஆதரவாளர்கள் முறியடித்துள்ளதாகவும்— கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில், தலைமைப்பீடப் பிரச்சினை மற்றும் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்கவை கட்சியின் மத்திய குழுவுக்கு நியமிப்பது ஆகிய விடயங்களை, விவாதிக்காமல் ஒத்திவைப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

சுகவீனமுற்றுள்ள திருமதி பண்டாரநாயக்கா கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. கட்சியின் மூத்த உறுப்பினர் கே. பி. இரத்னாயக்கா கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

இதே வேளை—

கட்சியின் தலைமைப் பதவியை அனுரா பண்டாரநாயக்காவிடம் ஒப்படைத்தால் அவரை எதிர்ப்பவர்களில் ஒருவரான — அவரது சொந்த மாமனார்—கேர்ணல் அனுருத்த ரத்வத்தை அரசியலில் இருந்து விலகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அனுரா பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டதும், 3 மாத கால விடுமுறையில் செல்ல அனுருத்த ரத்வத்தை விண்ணப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது எனக் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் சுட்டிக்காட்டுள [அ-த]


## கலைமகள் கல்வி நிலையம்

மீசாலை.

1992 / 93 ஆம் ஆண்டிற்கான

G. A. Q., B. A

(யாழ்ப்பாணம், பேராதனை) வகுப்புகள்

ஆரம்பம்: 01 - 02 - 1992 [சனி] காலை 10-30 மணி

1991 / 92 மேற்படி வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

1993 A/L கலை, வர்த்தக புதிய பிரிவு

ஆரம்பம்: 01 — 02 — 1992 [சனி] காலை 10 மணி

யாழ். பல்கலைக்கழக G. A. Q. வகுப்பு மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆசிரியர் குழாம்:

திரு. என். நவரட்ணராஜா B.A. — இந்து நாகரிகம்
திரு. வி. விநாயகமூர்த்தி B.A. [Hons] — அரசறிவியல்
திரு. கே. தர்மராஜா B. A. — தமிழ்
திரு. ஆர். கைலைநாதன் B.A. — ஆங்கிலம்
திரு. ஆர். நித்தியானந்தன் — பொருளியல் — புவியியல்
திரு. ஏ. ஸ்ரீஸ்கரன் — கணக்கியல், — வர்த்தகமும், நிதியும்

நிர்வாகி.

கலைமகள் கல்வி நிலையம்,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.

[19493]


# போலி பீடி தயாரித்த குழு காவல் துறையிடம் சிக்கியது!

ஆனைக்கோட்டை சாவற்காடு பகுதியில் போலி பீடி தயாரித்து விற்பனை செய்தவர்களை தமிழீழ காவல் துறையினர் கைது செய்தனர். போலி பீடி தயாரிக்க அவர்கள் பயன்படுத்திய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

ஆர். வி. ஜி. பீடிகளை போலியாகத் தயாரித்து விற்பனை செய்வதாகக் கிடைத்த தகவல்களை அடுத்து கடந்த புதன்கிழமை திடீரென அப்பகுதிக்குச் சென்ற காவல் துறையினர், சம்பந்தப்பட்டவர்களைச் கைது செய்தனர். [உ-111]

# வடமராட்சியில் ஆசிரியர் பற்றாக்குறை நீங்கும்

பருத்தித்துறை, ஜன. 28

வடமராட்சிக் கோட்டத்திலுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க வடமராட்சிக் கோட்டக் கல்வி அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

எட்டுக் கொத்தணிகளுக்குமாக 180 தற்காலிக ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதில் நாகர் கோவில், வல்வெட்டித்துறை ஆகிய கொத்தணிகளுக்குத் தலா 46 ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என கல்வி அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது. (இ-118)

# காதைக் கடித்துக் குதறிய இலங்கைத் தமிழ் அகதி!

சென்னை, ஜன. 28

தமிழகத்தில் சென்னைக்கு சமீபமாகவுள்ள கும்மிடிப்பூண்டி அகதி முகாமில் இரு ஈழத் தமிழர்களுக்கு இடையே அண்மையில் ஏற்பட்ட சச்சரவின்போது ஒருவர் மற்றவரின் காதைக் கடித்து துண்டாடினார்.

காதைப் பறிகொடுத்தவர் வவுனியாவைச் சேர்ந்த ஓர் அகதி. அவரின் பெயர் சந்திரன் [வயது 25]. காதைக் கடித்துக் குதறியவர் வவுனியா வாசியான குமார் [வயது 22] என்று தெரிவிக்கப்பட்டது.

கடியுண்டவர் வைத்திய சாலை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளாராம். [ஒ-த]

# யுத்தத்தை நிறுத்திப் பேசுக! இந்துப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 28

வடக்கு—கிழக்கில் நடைபெற்று வரும் அனாவசியமான யுத்தத்தை உடனடியாக நிறுத்துக. அன்பு, கருணை, அகிம்சை, சகிப்புத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தி இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குக!

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை, ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி உள்ளது.

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த சனிக்கிழமை நல்லூர் ஆதீனத்தில் நடைபெற்ற போது இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

வரலாற்றுப் புகழ் பெற்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், ஈழத்துச் சிதம்பரம், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் உட்பட வடக்கு—கிழக்கில் உள்ள பல ஆலயங்களுக்குச் சென்று பக்தர்கள் தமது சமய அனுஷ்டானங்களை நிறைவேற்ற முடியாமல் கஷ்டப்படுகின்றனர். இந்நிலையை நீக்கி, அவர்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் சென்று சமய வழிபாடு இயற்ற வகை செய்ய வேண்டும் — என்றும் ஜனாதிபதியிடம் கோரப்பட்டுள்ளது.

கடந்த கால அசம்பாவிதங்களால் 708 ஆலயங்கள் சேதமாகியுள்ளன; 60 ஆலயங்களில் விக்கிரகங்கள் அகற்றப்பட்டுள்ளன. சேதமடைந்த கோயில்களை புனரமைப்புச் செய்யவும், காணாமற்போன விக்கிரகங்களைப் புதிதாகப் பிரதிஷ்டை செய்யவும் நடவடிக்கை எடுக்குமாறு கோரும் மற்றொரு தீர்மானமும் பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. [அ-51)

## தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 28

பலாலி - கட்டுவன் முகாமில் இருந்து நேற்று நண்பகல் 11 மணியளவில் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் மற்றும் 50 கலிபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. [உ-3]

## யாழ். ஆஸ்பத்திரி மல, சல கழிவு:

# பண்ணை வரை வடிகாலை துப்புரவு செய்ய முடிவு

யாழ். ஆஸ்பத்திரி மல சல கழிவை அகற்றுவது தொடர்பான திட்டத்தின் முதற்கட்ட செயற்பாடாக, யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து பண்ணை வரையான வடிகால் பகுதியை நீரினால் துப்புரவு செய்யும் வேலைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்படும்.

இந்த விவகாரம் தொடர்பாக யாழ். செயலகத்தில் யாழ். அரச அதிபர் நடத்திய கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாநகர சுகாதார அதிகாரி தலைமையில் இந்த வேலைகள் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

# கிளிநொச்சி அபிவிருத்தி: ஆராய 4 நாள் கருத்தரங்கு

''கிளிநொச்சி மாவட்டத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கான உடனடித் தேவைகளை இனங்காணலும் செயல்முறைத்திட்டம் வகுத்தலும்'' — என்ற தலைப்பிலான நான்கு நாள் கருத்தரங்கு நாளை முதல் எதிர்வரும் முதலாம் திகதி வரை கிளிநொச்சியில் உள்ள யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தில் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 8 மணி முதல் பிற்பகல் 4-30 மணி வரை கருத்தரங்கு நடைபெறும். [உ-5]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தெரிவுக் குழுவில் இருந்து ஸ்ரீ.ல.சு. கட்சி வெளியேறும்?

## கட்சிக்குள் உள்ள ஒரு பிரிவினர் விலக வற்புறுத்து

கொழும்பு, ஜன. 28

''இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டும்''

—இப்படி அக்கட்சிக்குள் இருந்து ஒரு பிரிவினர் வற்புறுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் நடைபெற்ற சுதந்திரக் கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில், கட்சி தெரிவுக்குழுவில் தொடர்ந்து அங்கம் வகிப்பதால் பலன் ஏதும் ஏற்படப் போவதில்லை என தெரிவிக்கப்பட்டதாம்.

★ தொண்டமான் தனது யோசனைகளைப் பகிரங்கமாக வெளிப்படுத்தியது—

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதை சுதந்திரக் கட்சி திட்டமிட்டுக் குழப்புகின்றது என்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா குற்றஞ்சுமத்தியது—

★ யோசனை எதனையும் ஐக்கிய தேசியக்கட்சி சமர்ப்பிக்காதது—

ஆகியவை தெரிவுக் குழுவில் இருந்து சுதந்திரக்கட்சி வெளியேறுவதற்குக் காரணங்களாகக் காட்டப்பட்டுள்ளன.

''இன்னொருவரின் தலையிடியை நாம் ஏன் ஏற்கவேண்டும்?''— என்று சுதந்திரக் கட்சி எம். பி திரு. றிச்சர்ட் பதிரான நாடாளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார் என்று அறிய வருகிறது.

தெரிவுக் குழுத் தலைவரும் சுதந்திரக் கட்சி எம்.பியுமான மங்கள முனசிங்க அக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஆனால் அவர் கருத்து ஏதும் தெரிவிக்காமல் மௌனமாக இருந்தார். (இ-எ)

## மலையக கைதிகள் மத்தியில் செல்லச்சாமி உரை!

கொழும்பு, ஜன. 28

மலையகத்தில் அண்மையில் இடம்பெற்ற கொலை, கொள்ளைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 40 மலையகக் கைதிகள் மத்தியில் கைத்தொழில் துணை அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி உரையாற்றினார்.

பதுளை - ஹிந்துகலையில் அண்மையில் இடம்பெற்ற பத்துலட்சம் ரூபா கொள்ளை பொலீஸ் கான்ஸ்டபிள் மற்றும் தோட்ட சுப்றிண்டன் கொலை ஆகியவை தொடர்பாக கைது செய்யப்பட்டிருக்கும் சந்தேக நபர்களையே அமைச்சர் கடந்த சனியன்று சிறையில் சென்று சந்தித்தார்.

கைதிகள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் செல்லச்சாமி—

''தோட்டப் பகுதியில் நிலவும் அமைதியைக் குலைக்க சில வெளித் தீயசக்திகள் முயன்று வருகின்றன. அந்த விடயத்தில் மலையக மக்கள் நன்கு கவனமாக இருக்கவேண்டும்.''- என்று குறிப்பிட்டார். (உ)

## தமிழ்ப் பயணிகளிடம் கொள்ளையிட்டோர் கைது!

கொழும்பு, ஜன. 28

கொழும்பு - வவுனியா ரயிலில் தமிழ்ப் பயணிகளிடம் கொள்ளையடித்து வந்ததாகச் சந்தேகிக்கப்படும் இரு இளைஞர்கள் றாகம ரயில் நிலையத்தில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 7 தங்கச் சங்கிலிகள், 7 மோதிரங்கள், பணம் மற்றும் 2 போலி இராணுவ அடையாள அட்டைகள் ஆகியவை மீட்கப்பட்டன.

பொருள்களை இழந்தவர்கள் விவரங்களைப் பெற்றுக் கொள்ள றாகம பொலீஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. (உ-த)

## ஹெலி சூடு!

தென்மராட்சி, ஜன. 28

எழுதுமட்டுவாள் - நாகர் கோவில் வீதியில் மட்டை ஏற்றிவந்த டிராக்டர் மீது ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஞாயிறு இச்சம்பவம் இடம்பெற்றது. [இ-117]

## 30 இராணுவத்தினர் மீது இராணுவ நீதிமன்ற வழக்கு

கொழும்பு, ஜன. 28

பல குற்றச்சாட்டுகள் தொடர்பாக சுமார் 30 இராணுவத்தினர் மீது இராணுவ நீதிமன்ற விசாரணை நடத்தப்படவிருக்கின்றது.

தடை செய்யப்பட்ட பொருள்களை வட பகுதிக்கு எடுத்துச் செல்ல உதவியது, முக்கிய இராணுவ தகவல்களை வெளியிட்டது, கடமைகளில் கவனயீனமாக இருந்தது- ஆகியவையும் இவர்கள் மீதான குற்றச் சாட்டுகளில் அடங்கும்.

இதே வேளை - பொதுச் சட்டத்தின் கீழ் சில இராணுவத்தினர் மீது மேல் நீதிமன்றத்திலும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய சட்டமா அதிபர் தீர்மானித்திருக்கிறார். [இ-எ]

## சீனக்குடா விமானத் தள ஊழியர்கள்மீது விசாரணை

கொழும்பு, ஜன. 28

சீனக்குடா விமானத் தள குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக அத் தளத்தில் பணிபுரிந்துவரும 'சிவிலியன்' ஊழியர்களை விசாரணைக் குழு ஒன்று விசாரித்து வருகின்றது.

அக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற சமயம் அங்கு பல 'சிவிலியன்' ஊழியர்கள் பணியில் இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் —

குண்டுகள், வெடி மருந்துகள் மற்றும் ஆயுதங்களை வைத்திருந்த ஸ்டோர்களினுள் 'சிவிலியன்' ஊழியர்கள் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கவில்லை என்று விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

வெடி விபத்து நடந்த இடத்தில் காணப்படும் இடிபாடுகளினுள் இன்னும்வெடிக்காத நிலையில் வெடிகுண்டுகள் இருப்பதால் அப் பகுதிக்குள், விசாரணை நடத்தும் அதிகாரிகள் செல்லமுடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெடி விபத்துச் சம்பவத்துக்கு சதிச் செயல் காரணமா என்பதைக் கண்டறியவே விசாரணை நடத்தப்படுவதாக பொலீஸ் துப்பறியும் பிரிவு உயர் அதிகாரி ஒருவர் சொன்னார். [இ-எ]

### ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம்:

## பிரபாகரனுக்கும், மாத்தயாவுக்கும் எதிராக் குற்றப்பத்திரம் தயாராம்!

### ஸ்ரீலங்கா பாதுகாப்பு அதிகாரிகளுக்குத் தகவல்

ராஜீவ் காந்தி கொலை சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் பிரதித்தலைவர் கோ. மகேந்திரராஜா [மாத்தயா] ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய குற்றப்பத்திரம் தயாராகி விட்டது.

இதுபற்றிய விவரத்தை இந்திய புலனாய்வாளர்கள் ஸ்ரீலங்கா பாதுகாப்புத் துறை அதிகாரிகளுக்கு கடந்த வாரம் வெளியிட்டிருக்கின்றனர்.

சிங்களப் பத்திரிகையான ''லங்கா தீப'' இதனைத் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டிருக்கிறது.

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் தொடர்பாக இந்தியப் புலனாய்வாளர்களும், ஸ்ரீலங்கா பாதுகாப்பு அதிகாரிகளும் சென்னையில் நடத்திய ஆலோசனை பயனுள்ளதாக முடிவடைந்ததாகவும் –

மேலும் ஆலோசனைகளை நடத்துவதற்காக இந்தியப் புலனாய்வுக் குழுப் பிரதிநிதிகள் சிலர் விரைவில் கொழும்பு வரவிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

### கொக்கட்டிச்சோலைப் படுகொலை:

## விசாரணை நடந்த விதம் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கவலை

கொழும்பு, ஜன. 28

கொக்கட்டிச்சோலைப் படுகொலைச் சம்பவம் பற்றி அரசாங்கம் விசாரணை நடத்திய விதம் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை கவலை தெரிவித்திருக்கிறது.

பொதுமக்கள் படுகொலைக்குள்ளான விதம் பற்றிய முக்கிய சாட்சியம் வெளியாக்கப்படவில்லை என்றும், சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அப் படுகொலை குறித்து, ஒரே ஒரு இராணுவ அதிகாரி [முகாமின் தளபதி]யின் சாட்சியம் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அதுவும் அந்த அதிகாரி சத்தியப் பிரமாணம் எடுக்காமலேயே சாட்சியமளித்தார் என்றும் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டது.

அதன் பின்னரே மன்னிப்புச் சபை இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

இது பற்றி மன்னிப்புச் சபை தனது அறிக்கையில்– ''சட்டத்திற்கு புறம்பான முறையில் குடிமக்களைக் கொல்வதற்குப் பொறுப்பான தளபதி அல்லது சிப்பாய்கள் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை என்று அர்த்தம் கொள்ள வேண்டியுள்ளது. இதனால் திட்டவட்டமான உண்மைகள் சிலவற்றிற்கும், சிக்கலான கேள்விகளுக்கும் பதில் கிடைக்காமல் போகிறது'' - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலை படுகொலை தொடர்பான விசாரணை கடந்த வியாழக்கிழமை முடிவடைந்தது தெரிந்ததே. [இ-எ]

## வைத்தியசாலை கொடி தினம்

பருத்தித்துறை, ஜன. 28

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை கொடிதினம் பெப்ரவரி 9-ஆம் திகதி நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக பருத்தித்துறை செஞ்சிலுவைச் சங்கத் தலைவரும் பேராசிரியருமான திரு. வி. சே. கனகலிங்கம் கலந்து கொள்வார். [இ-118]


உ
சிவமயம்

# உபநயன அழைப்பு

★ சிரஞ்சீவி ரமணா ★

நிகழும் பிரசோற்பத்தி வருடம் தைமாதம் 16ஆம் திகதி [30-01-1992] வியாழக்கிழமை முற்பகல் 9-24 முதல் 10-54 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

பருத்தித்துறை சிவன் கோவில் முன்னாள் பிரதமகுரு சிவஸ்ரீ சோ. இராமநாதக் குருக்களின் பேரனும்,

சிவஸ்ரீ இ. வரதராசக் குருக்களின் ஏக புத்திரனுமாகிய

சிரஞ்சீவி ரமணாவிற்கு
பிரம்மோபதேசம், உபநயனம்

நடைபெறத் தெய்வத் திருவருள் கைகூடியுள்ளதால், அவ்வமயம் யாவரும் வருகை தந்து சபையைச் சிறப்பித்து, செல்வனை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்:
சிவஸ்ரீ இ. வரதராசக்குருக்களும், பாரியாரும்.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

[19500]



உ

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்,

நிகழும் பிரசோற்பத்தி வருஷம் தை மாதம் 15ஆம் நாள் [29-01-1992] புதன்கிழமை முற்பகல் 8-00 மணி முதல் 10-00 மணி வரையுள்ள கர்க்கடக லக்கின ★ சுபமுகூர்த்த வேளையில் ★

எனது கனிஷ்ட புத்திரன் நிறைநாட் செல்வன்
**சர்வலோகராஜா**
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி நிறைநாட் செல்வி
**செந்தமிழ்ச்செல்வி**
அவர்களுக்கும்

நல்லூர் சிவன் கோவில் மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி
கனகலிங்கம் செல்லம்மா,
நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

திரு. திருமதி
பத்மநாதன் அன்னலட்சுமி,
'அன்னை இல்லம்',
103/1, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[19433]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

உலோக, பிளாஸ்ரிக், கன்னார், அஸ்பெஸ்டஸ் கொள்கலன்கள் தேவை. அளவு, விலை விவரங்களுடன் தொடர்புகொள்க: இல. 381, மே/பா உதயன். [19489]

## வாடகைக்கு

மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் சிறிய கௌரவமான குடும்பத்திற்கு இரு அறை, குசினி விறாந்தை, தனிக்கிணறு, மலசலகூட வசதிகளுடன் பகுதி வீடு வாடகைக்கு உண்டு. கடித மூலம் தொடர்புகொள்ளவும்: இல. 380, மே/பா உதயன். [19488]

## ஜோதிட நூல்கள்

கருணைக்கடல் சாயிபாபா முற்பிறவி அவதார அற்புதங்கள், கருணைமழை பொழியும் பகவான் புத்தாண்டுப் பலன்கள்:- சோபிதா, ரகுநாதன் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். நூல்களாசிரியர்; பேராசிரியர் சத்தியதாஸன் (Mech. E. Elec. E.) சித்தன்கேணிச் சந்தி. [19470]

## விஞ்ஞான பாடத்திட்டம்

ஆண்டு 6—11 விஞ்ஞான பாடத்திட்டம் ஆண்டு. அலகு பாடவேளைப் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ளது. விலை ரூபா 60.00 இ. சங்கர் 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-1425]

## புத்தகம் கட்டுதல்

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/1186)

## அச்சு வேலைகள்

திருமணம், திறப்புவிழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

## A/L-MATHS

திரு. குணசிங்கம்
B. Sc. (Hons)

**93 - A/L**

புதிய பிரிவு

செவ்., வியா. 3-00 p.m.

PURE. — 3-00 p.m.

APP. — 4-00 p.m.

Personal

**New Science Centre,**

எழிலகம் முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி-1429)

உள்ளூரில் உற்பத்தி விடுதலைக்கு உயிர்நாடி

---

# In Loving Memory of

## ANTHON St. GEORGE

Born: 05 — 12 — 1921

Died: 28 — 01 — 1991

" Whoever Believes in Me Though he dies will live "

(Jhon 11 - 26)

Fondly remebered by his Loving wife Mangalam, Family members and Friends.

[19498]

---

# மகாபொல கொடுப்பனவு

## 1ஆம், 2ஆம் தவணைப்பணம்

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செயற்படும்.

| பிரிவு | திகதி | நேரம் |
|---|---|---|
| **இரண்டாம் வருடம்** | | |
| மருத்துவபீடம் ] | | |
| கலைப்பிரிவு ] | 27-01-92 | 1-30— 3-00 பி.ப. |
| வர்த்தகப் பிரிவு ] | 31-01-92 | 1-30— 3-00 பி.ப. |
| வியாபார - ] | 07 02-92 | 1-30— 3-00 பி.ப. |
| நிர்வாகப் பிரிவு ] | | |
| **மூன்றாம் வருடம்** | | |
| மருத்துவபீடம் ] | | |
| கலைப்பிரிவு ] | 28-01-92 | 9-00—12-00 மு.ப. |
| வர்த்தகப் பிரிவு ] | 03-02-92 | 9-00—12-00 மு.ப. |
| வியாபார - ] | 10-02-92 | 9-00—12-00 மு.ப. |
| நிர்வாகப் பிரிவு ] | | |
| **நான்காம் வருடம்** | | |
| மருத்துவபீடம் ] | | |
| (4ஆம், 5ஆம் ] | | |
| வருடம்) ] | 29-01-92 | 1-30— 3-00 பி.ப. |
| கலைப்பிரிவு ] | 05-02-92 | 1-30— 3-00 பி.ப. |
| வர்த்தகப்பிரிவு ] | 11-02-92 | 1-30— 3-00 பி.ப. |
| வியாபார - ] | | |
| நிர்வாகப் பிரிவு ] | | |
| **2ஆம், 3ஆம், 4ஆம், வருடம்** | | |
| பௌதிக - ] | | |
| விஞ்ஞானப் பிரிவு ] | 30-01-92 | 9-00—12-00 மு.ப. |
| உயிரியல் - ] | 06-02-92 | 9-00—12-00 மு.ப. |
| விஞ்ஞானப் பிரிவு ] | 12-02-92 | 9-00—12-00 மு.ப. |

**கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:**

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

[சி-1366]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 12—12—1919

சிவபதம்: 28—12—1991

தெல்லிப்பளை விழிசிட்டியைச் சேர்ந்த

## திருமதி சிதம்பரப்பிள்ளை பொன்னுப்பிள்ளை

நொந்து சுமந்து பெற்று நோகாமல் ஏந்தி முலை
தந்து வளர்த்தெடுத்த தாயாமே - மேதினியில்
அந்தி பகலாய் காத்தெம்மை -
புகழ் பரப்ப செய்திருந்தீர்
வந்தித்தோம் வணங்குகின்றோம் -
வானுலகில் இறைவனடி சேரவென்று.

அம்மாவின் ஆத்தாளின் அமரநிலை அறிந்து வந்து
சன்மார்க்க நெறியான சாந்திதனை கூறி
சும்மா நாம் அழைத்ததற்கு சோர்வின்றி
வந்து இன்று அம்மாவின் அந்தியேட்டி
வைபவத்தில் கலந்துண்டவர்க்கும்
தயவாய் நாம் நன்றிதனை நவில்கின்றோம்
அன்புடையீர் ஏற்றிடுவீர்.

நன்றி வணக்கம்.

**கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

சித்தன்கேணி. [19497]

---

# தெற்கில் மின்வெட்டு?

மின்சாரத்தைச் சிக்கனமாகப் பாவிக்கும்படி தென் இலங்கை மக்களை மின்சார சபை கேட்டிருக்கிறது.

காசல்றி, மவுசக்கலை, கொத்மலை, விக்டோரியா, ரண்டெனிகல நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

சாதாரணமாக வருட ஆரம்பத்தில்85வீதம்நீர் நிரம்பியிருக்கும் இந்த நீர்த்தேக்கங்களில் தற்போது என்றுமில்லாதவாறு 44 வீதம் நீர் மட்டுமே உள்ளதாகக் கூறப்படுகிறது.

மஸ்கெலிய நீர்த்தேக்கத்தில் நீரினால் மூடப்பட்டிருந்த சிவன் கோவில் தற்போது முழுமையாக வெளியில் தெரிவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-10)

# தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு தெரிவுக் குழு அழைப்பு!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு, இலங்கைத் தமிழ் காங்கிரஸ் பிரதிநிதிகளை அவர்களது யோசனைகள் குறித்து விளக்கமளிக்க வருமாறு அழைத்துள்ளது.

இச் சந்திப்பு இம் மாதம் 30 ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

தீர்வுக்கான யோசனைகளை அனுப்பிய அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்களை மட்டுமே விளக்கமளிக்க அழைப்பது என்று தெரிவுக்குழு ஏற்கனவே முடிவு செய்திருந்தது தெரிந்ததே. (உ—எ)

---

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை.

## தையல் பயிற்சி ஆசிரியர்கள்

மேற்படி பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்றப்பட்டதற்கான தகைமைச் சான்றிதழ் உள்ள அனுபவம் உள்ளோர் 31 - 01 - 1992 க்கு முன் விண்ணப்பிக்கவும். 01 - 02 - 1992 முற்பகல் 10-00 மணிக்கு எமது பணிமனையில் நடைபெற உள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் தரவும்.

## தையல் பயிற்சி மாணவர்கள்

மேற்படி பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை 01 – 02 - 1992 க்கு முன்னதாக எமக்கு அனுப்பி வைக்கவும். இப்பயிற்சி இலவசமாக அளிக்கப்படும். ஊனமுற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். 03 - 02 - 1992 முற்பகல் 10-00 மணிக்கு பயிற்சி ஆரம்பமாகும்.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
27 - 01 - 1992. (சி-1367)

---

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 16 — 12 — 1959

உதிர்வு: 07 — 02 — 1991



அமரர்

## சித்தாராம் சுப்பையா (ரவி)

திதி: 28 - 01 - 1992

அணைந்தது ஓர் அன்புத் தீபம் - என்றும்
அணையாத எங்கள் பாச தீபம்
மறைந்தது எங்கள் மணி விளக்கு - என்றும்
மங்காத குடும்ப குலவிளக்கு.

இப்பூவுலகை விட்டு மறைந்து ஓர் ஆண்டு பூர்த்தியாகும் இன்று, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**மனைவி, மகன், அம்மா, சகோதரர்மார், சகோதரிகள், மைத்துனர்மார், மருமக்கள்.**

47, மனிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். [19471]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அக்கறையின் அர்த்தம்

வவுனியாவை முந்நூறு கோடி ரூபா செலவில் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பொருட்டு முக்கிய அமைச்சுகள் வவுனியாவில் நடமாடும் சேவைகளை மாறி மாறி நடத்தப் போகின்றன.

வவுனியாவில் புதிய சிங்களக் கிராமங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. "நவகம" [புதிய கிராமம்] என்ற கிராமத்தில் மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த சிங்களவர்கள் குடியேறியுள்ளனர். அவர்களில் அனேகர் அம்பலாங்கொடைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தமக்குக் கிடைத்துள்ள காணிகளில் கல்வீடுகளைக் கட்டுவதற்கு அரசின் உதவியை நாடியுள்ளனர்.

இந்தச் செய்திகள், தகவல்கள் எல்லாம் எதனைக் குறிக்கின்றன, தெரிவிக்கின்றன, உணர்த்துகின்றன? வவுனியா மாவட்டத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதில் அரசாங்கம் தீவிரமாகச் செயற்படுகிறது என்பதையே. கிழக்கு மாகாணத்தைப் போல, வடக்கிலும் சிங்களக் குடியேற்றங்களை உண்டாக்கி, தமிழர்களின் இனவிகிதாசாரத்தைக் குறைக்க அரசு திட்டமிட்டுச் செயற்படுகிறது என்பதனையே உணர்த்துகின்றன!

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னர், 1940 ஆம் ஆண்டளவில், கிழக்கு மாகாணத்தில் எட்டுச் சதவிதமான சிங்களவர்களே இருந்தார்கள். இன்று...? 33.6 சதவீதமாகி இருக்கிறது.

திட்டமிட்ட முறையில் சிங்களக் குடியேற்றத்தை செய்ததால், செய்து கொண்டிருப்பதால் தான் கிழக்கு மாகாணத்தை தமிழர் தாயகத்தின் ஒரு பகுதி என்று ஏற்க சிங்களப் பேரினவாதிகள் மறுக்கிறார்கள். தமிழர் தாயகம் என்று ஒன்று இருக்கமுடியாது என்று நிராகரிக்க முனைகிறார்கள்.

இதே நோக்கத்துடன் தான், வவுனியாவில் இப்போது சிங்களக் குடியேற்றம் தீவிரப்படுத்தப்படுகிறது. வடக்கு தமிழரின் பிரதேசம் என்ற நிலையை மாற்றுவதில் அரசினதும், பேரினவாதிகளினதும் கண் ஊன்றிப் பதிந்துள்ளது. வவுனியாவின் ஒரு பகுதி இப்போது சிங்கள மக்கள் வாழும் பிரதேசமாக உள்ளது. அதனைத் தளமாகக் காட்டிக்கொண்டு, அதனை அண்டிய பகுதிகளை மெதுமெதுவாக சிங்களக் குடியேற்றத்தால் ஆக்கிரமிப்பதற்கான, கபளிகரம் செய்வதற்கான நடவடிக்கைகளே முடுக்கிவிடப்பட்டுள்ளன.

யுத்த காலத்தில், சண்டையோடு சண்டையாக, அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியேற்றிவிடுவது இலகுவானது என்று அரசாங்கம் எண்ணியிருக்கவேண்டும். கிழக்கில் தடம் பதித்து ருசி கண்ட அனுபவத்துடன் இப்போது வடக்கின் வாசலான வவுனியாவிலும் சிங்கள மக்களைப் பெரும்பான்மையினராக்க முயற்சிக்கிறது.

இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் தமிழ் மக்களை இடம்பெயரச் செய்து, அவர்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்துவரும் மண்ணை அபகரிக்கும் தந்திரமான சதித் திட்டமே இது.

எல்லையாக உள்ள வவுனியாவை எக்காரணம் கொண்டும் இழக்கக்கூடாது என்ற உறுதியை வவுனியா வாழ் தமிழ் மக்கள் வளர்த்துக் கொள்வது அவசியம். குடாநாட்டில் நெருங்குண்டு வாழும் தமிழர்களும் வவுனியா மண்ணுக்கு ஏற்படப் போகும் ஆபத்தை உணர்ந்து அப்பகுதி நோக்கிச் செல்லுதல் அவசியம்.

# மத்தியஸ்தம் செய்ய கனடா அரசு தயார்!

கொழும்பு, ஜன. 28

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் விடயத்தில் மத்தியஸ்தம் செய்ய தனது அரசு தயாராக இருப்பதாக கனடா ஸ்ரீலங்கா அரசுக்கு அறிவித்திருக்கிறது.

கொழும்பு வந்துள்ள கனேடிய மனித உரிமைக்குழு, வெளியுறவு அமைச்சுச் செயலாளர் பேர்னாட் திலகரத்னாவைச் சந்தித்து இதனைத் தெரிவித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் —

மத்தியஸ்தம் செய்வதற்கு கனடா தெரிவித்த விருப்பத்தை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக் கொள்ளாது என்று தெரிய வருவதாக "சண்டே ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய உத்தரவிட்டார் என்று தெரிவித்து, விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மீது குற்றப் பத்திரிகையை விரைவில் தாக்கல் செய்ய இந்திய அரசு தயாராகிவரும் இச்சந்தர்ப்பத்தில்-

கனடாவின் மத்தியஸ்தத்தை இலங்கை அரசு ஏற்பது பொருத்தமற்றது என்று ஸ்ரீலங்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம். [உ-எ]

# யுத்தத்தை நிறுத்தாவிடில் அரசுக்கு உதவி நிறுத்தம்!!

## ஸ்ரீலங்காவுக்கு கனடா எச்சரிக்கை

கொழும்பு, ஜன 28

தற்போதைய வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர ஸ்ரீலங்கா அரசு உடன் சாதகமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறுமேயானால், ஸ்ரீலங்காவுக்கு தொடர்ந்து உதவிகள் வழங்குவது குறித்து கனேடிய அரசு மீளாய்வு செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்று எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது.

கொழும்பு வந்துள்ள கனேடிய மனித உரிமை விசாரணைக்குழு உறுப்பினர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார் என்று 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழ் தெரிவிக்கிறது.

வடக்கு-கிழக்கில் சண்டை நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவருமாறு ஸ்ரீலங்கா அரசுக்கு இக்குழு வேண்டுகோள்விடுக்க விரும்பதாகவும் அந்த உறுப்பினர் சொன்னார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான அமைதித்தீர்வு ஒன்றைக் காணும்படி ஸ்ரீலங்கா அரசு மீதும், விடுதலைப் புலிகள் மீதும் கனடா அரசு நெருக்குதல்கள் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் 'சண்டே ரைம்ஸ்' செய்தி தெரிவிக்கிறது.

இதன் ஒரு கட்டமாக—

கனடாவில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் அந்த நாட்டு அரசு ஈடுபடலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

# உடன் பேச்சை ஆரம்பிக்க கனடா குழுவினர் சிபார்சு!

கொழும்பு, ஜன. 28

ஸ்ரீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே உடனடியாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்று கொழும்பு வந்துள்ள கனேடிய மனித உரிமை விசாரணைக்குழு சிபார்சு செய்ய விருப்பதாகத் தெரியவருகிறது.

ஸ்ரீலங்காவில் தாம் மேற்கொண்டிருக்கும் ஒன்பது நாள் சுற்றுப்பயணத்தின் முடிவில் இக்குழுவினர் ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேசவிருக்கின்றனர். அப்போது தமது சிபார்சை ஜனாதிபதியிடம் குழுவினர் சமர்ப்பிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக்குழு எதிர்வரும் புதன் கிழமை கனடா திரும்புகிறது. அதற்கு முன்னர் ஜனாதிபதியை இக்குழு சந்திக்க விருப்பதாக குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கனேடிய மனித உரிமை விசாரணைக் குழுவின் தலைவராக, உலக திருச்சபைகளின் கவுன்ஸில் தலைவர் வண. டாக்டர் லொயிஸ் வில்ஸன் செயற்படுகிறார். நான்கு கனடா எம். பிக்களும் குழுவில் இடம்பெற்றுள்ளனர். (உ-எ)

## முதலில் தொண்டாவுடன் சந்திப்பு!

கனேடிய நாட்டின் விசாரணைக்குழு கொழும்பை வந்தடைந்தவுடன் அமைச்சர் தொண்டமானையே முதலில் சந்தித்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

அச்சந்திப்பு ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது.

அப்போது அமைச்சர் தொண்டமான் கனேடிய மனித உரிமை விசாரணைக் குழுவிடம் தெளிவாக வலியுறுத்திக் கூறினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தை

• இச்சந்திப்பு இடம்பெற்று இரண்டு நாள் கழித்து அமைச்சர் தொண்டமான் இந்தியாவிற்குப் புறப்பட்டுச் சென்றார். [உ-எ]

# கண்டி, வவுனியா, மட்டக்களப்பிலும் மனித உரிமைகள் குழு விசாரணை!

மூன்று தினங்கள் கொழும்பில் தங்கியிருந்து முக்கிய பிரமுகர்களுடன் பேச்சுக்கள் நடத்திய கனேடிய மனித உரிமை விசாரணைக் குழுவினர் வெளியிடங்களில் தங்கள் விசாரணைகளை நடத்த கடந்த வெள்ளிக்கிழமை புறப்பட்டுச் சென்றனர்.

இரண்டு பிரிவுகளாக இக்குழுவின் உறுப்பினர்கள் வெளி மாகாணங்களுக்கு தமது பயணத்தை மேற்கொண்டனர்.

ஒரு பிரிவு கண்டி, தங்காலை மற்றும் வவுனியா ஆகிய இடங்களுக்குச் சென்றது.

இரண்டாவது பிரிவு மட்டக்களப்பிற்குச் சென்றது.

தங்கள் வெளி மாவட்டப் பயணங்களை முடித்துக் கொண்டு இவர்கள் நேற்று (திங்கள்) பிற்பகல் கொழும்பு திரும்புவதாக இருந்தது.

கொழும்பில் தங்கியிருந்த சமயம் இக்குழுவினர் ஸ்ரீலங்கா வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்தினா, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா, கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் உட்பட பல பிரமுகர்களைச் சந்தித்து பேசினர். (உ-எ)

# அக்கறை இல்லை என கண்டனம்

கொழும்பு, ஜன. 28

மனித உரிமை பேணல் விஷயத்தில் கொழும்பு அரசு காட்டும் அக்கறை போதுமானதாக இல்லை என்று கனேடிய மனித உரிமைக்குழு கூறியிருக்கிறது.

வேறு நோக்கங்களுக்கு வழங்கப்பட்ட நன்கொடைப் பணத்தில் ஆயுதங்கள் வாங்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சம்பவங்களையும் கனேடிய மனித உரிமைக்குழு அடையாளம் கண்டுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

மனித உரிமை மீறலில் ஈடுபடுவதாக விடுதலைப் புலிகளையும் இத்தூதுக்குழு கண்டுள்ளது என்றும் 'சண்டே ரைம்ஸ்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை சமர்ப்பித்த 30 யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்ட போதும், அவற்றை அரசாங்கம் அமுல் செய்யவில்லை என்றும் கனேடிய மனித உரிமைக்குழு தெரிவித்துள்ளது. [இ-எ]

### மின் கட்டண மோசடியில் கோடீஸ்வரர்கள்

கொழும்பு, ஜன. 28

மின் கட்டணத்தில் மோசடி செய்த குற்றச்சாட்டின் பேரில் கொழும்பு கறுவாக்காட்டைச் சேர்ந்த தந்தை, மகன், மருமகன் ஆகிய மூன்று கோடீஸ்வரர்களுக்கு மொத்தமாக 7 லட்சத்து 18 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அருகருகே வீடுகளைக் கட்டி இருந்த இம்மூவரும் மின் மானியில் நவீன ரிமோட் கொன்ரோல் ஒன்றைப் பொருத்தியது மூலம் கடந்த மூன்று ஆண்டுகளாக மாதம் 600 ரூபா முதல் 700 ரூபா வரையுமே மின் கட்டணம் செலுத்தி வந்தனர் என்றும், ஆனால் இவர்களது மின்சாரப் பாவனைக்கு மாதாமாதம் மூவாயிரம் ரூபா வரை செலுத்தி இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-10]

### அரசுக்கு எதிராக பத்திரிகைகள்

கொழும்பு, ஜன. 28

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரிக்கரைப் பத்திரிகைகளைத் தவிர ஏனைய பத்திரிகைகள் எல்லாம் அரசாங்கத்துக்கு எதிராகவே உள்ளன.

ஐ. தே. க. பொதுச் செயலாளரும் அமைச்சருமான சிறிசேன குரே இப்படித் தெரிவித்துள்ளார் என்று 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. [இ-எ]

### ராஜீவ் பெயரில் சுவிஸ் வங்கியில் பணம்

லண்டன், ஜன. 28

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி பெயரில் சுவிஸ் வங்கி ஒன்றில் ரூபா 4,625 கோடி பணம் உள்ளதாக சுவிட்சர்லாந்து பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

'ஸ்வைசர் இல்ஸ்ரேட்டர்' என்ற இந்தப் பத்திரிகை தனது அந்த செய்தியில் ராஜீவ் உட்பட மூன்றாவது உலக நாடுகளைச் சேர்ந்த முன்னாள் தலைவர்கள் 14 பேர் சுவிஸ் வங்கியில் பணம் போட்டு வைத்துள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

முன்னாள் பிலிப்பீன்ஸ் அதிபர் மார்க்கோஸ் முன்னாள் உகண்டா அதிபர் இடிஅமீன் ஆகியோரும் இவர்களில் அடங்குவர். (த)

### கலாநிதி பட்டப் பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் 1991 ஆம் ஆண்டில் நடத்திய மெய்யியல் [கல்வி] கலாநிதிப் பட்டப் பரீட்சையில் திரு. ஆ. சின்னத்தம்பி சித்தி அடைந்துள்ளார்.

இவர் முன்னர் மன்னாரில் கல்வி அதிகாரியாகப் [ஆங்கிலம்] பணிபுரிந்தவர் ஆவார். [இ]

### கனேடியக் குழு காத்தான்குடி விஜயம்

கொழும்பு, ஜன. 28

கனேடிய மனித உரிமைக் குழுவினர் காத்தான் குடிக்கும் விஜயம் செய்தனர். காத்தான்குடியில் பாதிக்கப்பட்ட பகுதிகளை இவர்கள் பார்வையிட்டதுடன் அங்கு இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் புகார்கள் குறித்தும் ஆராய்ந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-த]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கு கடும் நிபந்தனை!

## உலக வங்கி விதித்திருக்கிறது

உலகவங்கி சிபார்சு செய்த சீர்திருத்தங்களை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக் கொண்டால் மட்டுமே உதவும் நாடுகள் அந்த நாட்டுக்கு நிதி உதவிகளை வழங்க வேண்டும் என்று கடும் நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கிறது.

உலக வங்கியே இக்கடும் நிபந்தனையை உதவும் நாடுகளுக்கு விதித்துள்ளது.

தமது சிபார்சுகளை ஸ்ரீலங்கா அரசு ஏற்க மறுக்கும் பட்சத்தில் அந்த நாட்டுக்கு உதவி அளிக்கக் கூடாது என்றும் உதவும் நாடுகளை உலக வங்கி கோரியிருக்கிறது.

ஸ்ரீலங்காவுக்கு உதவும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் பெப்ரவரிமாதம் 7ஆம், 8 ஆம் திகதிகளில் பிரான்ஸின் தலை நகர் பாரிஸில் நடைபெறுகின்றது.

ஸ்ரீலங்கா பற்றி உலக வங்கி தயாரித்த இறுதி அறிக்கை அக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

உலக வங்கி விதித்துள்ள கடுமையான சீர்திருத்தங்களில் சில பின் வருமாறு;

★ மொத்த தேசிய உற்பத்தியில் எட்டுச் சத வீதத்திற்குள் பட்ஜட் துண்டு விழும் தொகை கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

★ இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் அரசுக்குச் சொந்தமான தோட்டங்கள் வர்த்தக மயமாக்கப்பட வேண்டும்.

★ வீதி, போக்குவரத்து, தொலைத் தொடர்பு ஆகியன சம்பந்தமான கட்டமைப்புகளின் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

★ வெளிநாட்டு மூலதனத்திற்கு விதிக்கப்பட்டுள்ள முட்டுக்கட்டைகள் நீக்கப்பட வேண்டும்.

★ மத்திய வங்கி மீள் நிதி உதவி செய்வது, உயர் வட்டி விகிதங்கள் ஆகியவற்றை நிறுத்த வேண்டும். கூடுதலாக விட்டுக் கொடுக்கும் தன்மையுடனான பரிவர்த்தனைக் கொள்கை (இதன் அர்த்தம் ரூபாவின் மதிப்பு குறைப்பாகும்.)

★ தற்போதைய தொழில் சட்டங்களுக்கு சீர்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்.

### சீனக்குடாச் சம்பவத்தைக் கேள்விப்பட்டதும்

## தமிழகத்திலிருந்து வந்த ஈழ அகதிகள் இடைவழியில் திரும்பிச் செல்லவிரும்பினர்!

கொழும்பு, ஜன. 28

சீனக்குடா விமானத்தளம் குண்டு வெடிப்பால் தகர்ந்தது பற்றிய செய்தி வெளியானதும் ''எம். வி. அக்பர்'' கப்பலில் திருமலைக்கு வந்து கொண்டிருந்த அகதிகள் இடைவழியில் தமிழகம் திரும்ப வற்புறுத்தினராம்.

அன்றையதினம் பிற்பகலில் கப்பல் இந்து சமுத்திரத்தில் வந்து கொண்டிருந்தபோது, அதில் வந்த அகதிகளில் ஒருவரான சத்தியநாதன் என்பவர் பி. பி. ஸி. செய்தி மூலம் விமானத்தளம் தகர்ந்தது பற்றிய செய்தியைக் கேட்டாராம்.

கப்பலில் உள்ள அகதிகள் மத்தியில் செய்தி பரவியதும் தாயகம் திரும்பவிருப்பம் தெரிவித்த அகதிகள் மீண்டும் தமிழகத்திற்கே கப்பலைத் திருப்பும்படி வற்புறுத்தினர்.

அகதிகள் மத்தியில் பதற்றம், பீதி உச்சகட்டத்தில் இருந்தபோது—

கப்பலில் இருந்த இந்திய உயர் அதிகாரிகளுடன் வானொலித் தொலைத் தொடர்பு மூலம் அமைச்சர் தயாரத்னா தொடர்பு கொண்டார்.

அகதிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் அமைச்சர் உறுதி கூறி ஆறுதலும் தெரிவித்தார்.

இப்பதற்றத்தின் மத்தியில் கப்பல் அடுத்த நாள் நண்பகல் 11-15 மணியளவில் திருமலை துறைமுகம் வந்தடைந்தது. [உ-எ]

## வீதி விபத்து தடுப்புவிதிகளை அமுல் செய்வதில் மும்முரம்

யாழ்ப்பாணம், ஜன. 28

வீதிப் போக்குவரத்து விதிகளை அமுல் செய்யும் பணியில் தமிழீழ காவல் துறையினர் நேற்று மும்முரமாக ஈடுபட்டனர்.

யாழ். நகரப் பகுதியில் உள்ள வீதிகளில் மட்டுமல்லாமல், நகருக்கு சுற்றாடலில் உள்ள வீதிகளிலும் காவல் துறையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

விதிகளை மீறிய சைக்கிளோட்டிகளும், வாகனச் சாரதிகளும் காவல்துறையினரால் தடுக்கப்பட்டு புத்திமதி புகட்டப்பட்டனர். [உ-3]

## கருத்தரங்கு

கொழும்புத்துறை, ஜன. 30

கொழும்புத்துறையைச் சேர்ந்த மாவீரர்கள் லெப்ரினன்ட் கருணா, வீரவேங்கை கிருஷ்ணகுமார் ஆகியோரின் நினைவு தின எழுச்சிக் கருத்தரங்கு இன்று மாலை 6 மணிக்கு கொழும்புத்துறை சனசமூக நிலையத்தில் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. [உ-30]

## புதிதாக வாங்கிய ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

(Reconditioned), ஒவ்வொன்றும் 80 ஆயிரம் அமெரிக்க டொலர் என்ற விலைக்கு ஸ்ரீலங்காவுக்கு கடந்த அக்டோபரில் விற்பனை செய்திருந்தது.

ஆனால் தற்போது இந்தக் கவச வாகனங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்வதை அந்நாடு அடியோடு நிறுத்தி விட்டது. இதனால் அவற்றுக்கு உதிரிப்பாகங்களைப் பெறமுடியாத கஷ்ட நிலை ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு ஏற்பட்டிருக்கிறது.

இங்கு வந்து சேர்ந்த கவச வாகனங்களில் ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக இயங்க முடியாமல் உள்ளது. மூன்று கவச வாகனங்களின் முக்கிய உதிரிப்பாகங்கள் உடைந்து போயுள்ளன.

எஞ்சியவற்றை யுத்த முனைக்கு எடுத்துச் சென்றாலும், அங்கு அவற்றுக்கு திடீரென கோளாறு ஏற்பட்டு, உதிரிப்பாகங்கள் தேவைப்பட்டால் என்ன செய்வது என்று தெரியாமல் அதிகாரிகள் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் யுத்த முனைக்கு அவற்றை அனுப்பாமல் தவிர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இராணுவம் பயன்படுத்தி வரும் பிரிட்டிஷ் தயாரிப்புகளான சரசென், சலாடின் ஆகிய கவச வாகனங்களுக்குப் பதிலாக ஹங்கேரி கவச வாகனங்களைப் பயன்படுத்த இராணுவம் திட்டமிட்டிருந்தது.

ஆனால் அவற்றைப் பயன்படுத்துவதில் சிக்கல் இருப்பதால், மாற்றுவழி ஒன்றைக் காணவேண்டிய நிர்ப்பந்தம் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு தற்போது ஏற்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

யாழ். குடா நடவடிக்கையின் போது இந்தக் கவச வாகனங்களுடன் சீனத் தயாரிப்பான புதிய 18 கவச வாகனங்களையும் உபயோகிக்க இராணுவம் தற்போது திட்டமிட்டு வருகிறது.

எனினும் —

இந்தக் கவச வாகனங்கள் கனமானவையாக இருப்பதால் யாழ் குடா மீது நடத்தத் திட்டமிட்டுள்ள கரை - தரைத் தாக்குதலின் [Amphibious Landing] போது இவை கரைப்பகுதி மணலினுள் சிக்கிக் கொண்டு விடலாம் என்று பாதுகாப்பு நிபுணர்கள் நம்புகின்றனர்.

இதே வேளை —

கடந்த ஆண்டின் இறுதியில் சீனாவில் இருந்து வந்து சேர்ந்த மூன்றுப் பீரங்கிப் படகுகளும் இயந்திரக் கோளாறு காரணமாக இயங்க முடியாத நிலையில் இருப்பதாகவும் -

அந்த மூன்று பீரங்கிப் படகுகளிலும் உள்ள கோளாறைக் கண்டறிவதில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## பதுளையில் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் காணாமற் போதல், வீதித் தடைகள், சோதனை முகாம்கள், சுற்றி வளைப்புத் தேடுதல்கள் போன்றவை தீவிரமடைந்திருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேயிலைத் தோட்டங்களை காவல் புரிய இராணுவத்தினர் அமர்த்தப்பட்டுள்ளனர். பதுளை பொலீஸ் நிலையத்தைச் சுற்றி மண் மூடைகள் அடுக்கப்பட்டு பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## அதிவேக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

'நொட்'களாகும்.

இப்புதிய ரக படகுகளில் 19 உள்ளூர்த் தயாரிப்பாளர்களால் கடற்படையினருக்கு வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் எட்டுப் படகுகள் ஹைட்ரோஜெட் உந்து சக்தியால் இயக்கப்படுகின்றன.

இப்படகுகளின் அணி மன்னார் பகுதியிலும் கிழக்குக் கரையோரத்தில் ஆழமற்ற கடல் பகுதிகளிலும் செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இன்னும் அதிவேகத்துடன் செல்லக்கூடிய நான்கு (Water-jet Propelled) படகுகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. [உ-எ]

## புல்ஜென்ஸ் கடத்தல் சம்பவம் உடுகம்பொல சம்பந்தம்?

கொழும்பு, ஜன. 28

பேராசிரியர் புல்ஜென்ஸ் கடத்தல் சம்பவத்தில் பிரதிப் பொலீஸ்மா அதிபர் உடுகம்பொலவும் சம்பந்தப்பட்டிருப்பதாக கொழும்பில் பேசப்படுகிறது.

இதன் காரணமாகவே இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை ஆரம்பமானதும் டி. ஐ. ஜி. உடுகம்பொல கட்டாய லீவில் அனுப்பப்பட்டார் என்று கூறப்படுவதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

இந்த வழக்கில் முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா உட்பட பலர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருப்பது தெரிந்ததே. [உ-10]

## மனித உரிமை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யளவில் முகமூடியுடன் வந்த ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்று கண்காட்சிக் கூடத்துக்குள் நுழைந்து, அங்கிருந்தவற்றை அடித்து, நொருக்கிய பின் கையில் அகப்பட்ட படங்களுடன் தலைமறைவாகி விட்டது.

இந்தச் சம்பவத்தில் ஒருவர் தாக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படையினரே இவ்வேலையைச் செய்ததாக கண்காட்சியை ஏற்பாடு செய்த எதிரணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து சுதந்திரக்கட்சி எம். பியான சமரவீர பொலீஸாருக்கு முறைப்பாடு செய்திருக்கிறார். [உ-எ-3]

## முறைசாராக் கல்வி உபவள நிலையம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவின் சாவகச்சேரி கல்விக் கோட்டத்துக்கான கல்வி உபவள நிலையம், டிறிபேக் கல்லூரியில் நாளை காலை 9-00 மணிக்குக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியை ஒட்டி கண்காட்சியும், விசேட கூட்டமும் நடைபெறும்.

1989 இல் முறைசாராக் கல்விப் பிரிவில் தொழிற்திறன் பயிற்சி பெற்றோருக்கான சான்றிதழ்களும், முதலுதவிப் பயிற்சி பெற்றோருக்கான சான்றிதழ்களும் இக் கூட்டத்தில் வழங்கப்படும். [உ]

## தமிழர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜன. 28

திருகோணமலை மாவட்டம் கடற்கரைச்சேனைப் பகுதியில் கனகையா சித்திரவேல் [69 வயது] என்பவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம் சறோஜினிதேவி

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் சறோஜினிதேவி சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலம்சென்ற இரத்தினத்தின் [முன்னாள் வணிகத் துறை தலைவர், தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்] அன்பு மனைவியும், செல்வி றாஜினியின் [யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவி] அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை [28-1-1992] மாலை இரண்டு மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
செல்வி றாஜினி
[மகள்]

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(19504)

### வாரித்தம்பி கிருஷ்ணபிள்ளை

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வாரித்தம்பி கிருஷ்ணபிள்ளை 27-1-1992 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், கந்தசாமி [புனர்வாழ்வுப் பகுதி, செயலகம், யாழ்ப்பாணம்], டாக்டர் தங்கராஜா [அரசினர் வைத்தியசாலை, மாம்புரி, புத்தளம்], நடராசா, நாகேஸ்வரி, புவனேஸ்வரி, பரமேஸ்வரி, நகுலேஸ்வரி, ஆனந்தராசா [மாவட்ட நீதிமன்றம், ஊர்காவற்றுறை] ஆகியோரின் அன்புத் தந்தையும்.

சறோஜினிதேவி, ஞானசௌந்தரி, ராதாராணி, ஆறுமுகம் [தொலைத்தொடர்பு திணைக்களம், வவுனியா], கருணாநிதி [மகாவித்தியாலயம், இராமநாதபுரம்], சதாசிவம் [வலிகாமம் கிழக்கு பிரதேசசபை உப அலுவலகம், கோப்பாய்], விஜயகுமார் [விஜயா ஸ்ரோர்ஸ், கல்வியங்காடு] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாலை 4-00 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி மாயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி. கந்தசாமி
[மகன்]

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(19905)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org